# அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில்
# மதுவிலக்கு விழிப்புணர்வு முகாம்

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் 29.12.2021 அன்று நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் மதுவிலக்கு மற்றும் மகளிர் எதிர்கொள்ளும் சமுதாயச் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமில் கல்லூரி முதல்வர் Dr.K.ரஜப் பாத்திமா வரவேற்புரையாற்றினார். கல்லூரித் தலைவர் Er.S.K.செய்யது அகமது தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். கல்லூரித் தாளாளர் ஹாஜி Er.S.K.குதா முகம்மது முன்னிலை வகித்தார். கல்லூரிப் பொருளாளர் ஹாஜி.O.K.ஜாபர் சாதிக் வாழ்த்துரை வழங்கினார். நெல்லை மாநகர மதுவிலக்குப் பிரிவு காவல்துறை ஆய்வாளர் திருமதி.L.முத்துலெட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். முகாமில் கலந்து கொண்ட மாணவிகளும், பேராசிரியர்களும் பயனடைந்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர்.த.ராமலெட்சுமி செய்து, நன்றியுரையாற்றினார்.




